# வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபை

## காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

சபைக்கு சொந்தமான 139.1 பர்சஸ்களை கொண்ட கொரகந்த நிசலகம காணியின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 30,110,884 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளதுவரை ஆக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள் மற்றும் மீதியினை உறுதி செய்யும் சான்றிதழ்கள் என்பன கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,150,951 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,723,316 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.1 ஏக்கர்வரி

----------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 130,038 இற்கான ஏக்கர்வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 274,917 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 4,227,265 இற்கான முத்திரை கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 கடை வாடகை

-----------------------

எத்கந்துர கடைகளை வாடகை கொடுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உடன்படிக்கையின் 04 வது நிபந்தனையின் பிரகாரம் வாடகைக்கு பெற்றுள்ள கடைகளின் இடை வாடகைக்கு கொடுத்தல் கூடாது எனினும் 4 ஆம் 5 ஆம் இலக்க கடைகள் மாதாந்தம் ரூபா 3,000 வீதம் இடைவாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) உடன்படிக்கையின் 10வது நிபந்தனையின் பிரகாரம் வாடகையாளர் தான் வாடகைக்கு பெற்றிருந்த கடையின் சூது விளையாட்டு ஒன்று நடத்துதல் அல்லது நடத்துவதற்கு உதவுதல் மேற் கொள்ளப்படக் கூடாது என குறிப்பிட்டிருந்த போதும் 13 ஆம் இலக்க கடையில் வாடகையாளரினால் குதிரைப் பந்தய புக்கி ஒன்று நடாத்துவதாகவும் 12 ஆம் இலக்க கடை மூடப்பட்டிருந்ததெனவும் அவதானிக்கப்பட்டது.

2.2.4 எத்கந்துர வாராந்த சந்தைக் கட்டணம்

--------------------------------------------------------------

எத்கந்துர வாராந்த சந்தை தொடர்பாக 2014 பெப்ரவரி 06 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த இடப் பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சிறு கடை ஒன்றில் இருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணம் அல்லது வியாபாரத்தின் மீது அறவிடப்படும் கட்டணம் தொடர்பாக சபை தீர்மானம் ஒன்று அல்லது வர்த்தமானி அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வியாபாரத்தை அடிப்படையாக வைத்து குறிப்பிட்ட கட்டணம் ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) வாராந்த சந்தையின் வாடகை அறவீடு செய்யும் அலுவலர்களிடம் தலைமை அலுவலத்தினால் வழங்கியிருந்த சந்தை வாடகை அறவீடு செய்யும் பற்றுச் சீட்டு புத்தகங்களில் தலைமை அலுவலக முத்திரை பதிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சிறு கடைகளை வியாபாரக் கருமங்களுக்காக பயன்படுத்தாமல் அவைகளின் முன் பகுதியில் கூடாரங்கள் அடித்து வியாபார நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காகவும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைப்பதற்காகவும் அவை பயன்படுத்தப்பட்டிருந்தன.

(iv) கடைகள் முறைப்படி நிர்மாணிக்கப்படாமை மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் வியாபாரிகளுக்கு தேவையான வசதிகள் கிடைக்காத காரணத்தினால் 20 சிறு கடைகள் பயன்படுத்தாத நிலையில் காணப்பட்டன.

2.2.5 தொலைபேசி தொலைத் தொடர்புகள் டவர்களுக்கான கட்டணம்

----------------------------------------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலைபேசி தொலைத் தொடர்பு டவர்கள் தொடர்பாக 2014 பெப்பரவரி 14 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய இலக்கம் 1597/8 கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு அனைத்து டவர்களுக்கும் இசைவு சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் அத்துடன் அவ்வாறு அவை பெறப்படாவிடின் இசைவு சான்றிதழ் இன்றி பயன்படுத்தும் அங்கீகாரம் பெற்று ஒரு வருடம் மிகைக்கும் தினத்தில் இருந்து சபையினால் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிடின் ஒரு நாளைக்கு ரூபா 50 வீதம் தண்டம் அறவிடப்படவேண்டும். அதன் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டுள்ள 03 டவர்களுக்காகவும் ரூபா 15,000 இசைவு கட்டணம் மற்றும் ரூபா 237,450 தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) தனியார் நிறுவனமொன்றினால் நமுனுகுலவத்த அகுரட்டியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலைபேசி தொலை தொடர்பு டவர்களுக்கான முன் ஆயத்தக் கட்டணம் செலுத்தும்

போது ரூபா 20,000 செலுத்துவதற்கு இணங்கி 2009 பெப்ரவரி 05 திகதி அணவல் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 2014 பெப்ரவரி மாதம் வரை அத் தொகையை சபைக்கு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------

சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் வீதிகள் பராமரிப்பு மற்றும் வீதி விளக்கு பாராமரிப்பு விடயங்களுக்காக டிபர் வண்டி ஒன்று தேவை என தலைவரினால் 2012 செப்டம்பர் 03 திகதி புரநெகும மாகாணச் செயற்திட்டப் பணிப்பாளருக்கு அறிவித்திருந்தார். இதன் பிரகாரம் 2013 செப்டம்பர் 11 திகதி ரூபா 3,450,574 தொகைக்கு 2 கியுப் கொள்ளளவுடைய டிபர் வண்டி ஒன்று சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள குறுகிய பாதைகளில் இந்த வண்டியை செலுத்த முடியாத நிலையில் காணப்பட்டது என தலைவர் 2013 அக்டோபர் 08 திகதி மாகாண செயற்திட்ட பணிப்பாளருக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டரீதியாக உரித்தாக்கப்படாமை

------------------------------------------------------------------------------------------------------------------

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கும் குழுவின் விதப்புரையின் பிரகாரம் கரந்தெனிய பிரதேச சபையினால் வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 4,606,306 இற்கான சொத்துக்கள் மற்றும் ரூபா 2,740,757 இற்கான பொறுப்புக்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ன. எனினும் கணக்காய்வு திகதியாகிய 2014 ஏப்ரல் 11 திகதி வரை குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டரீதியாக பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) வருமான நிருவாகம்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்